# தமிழ் (TAMIL)
# (237)

## பணித்தாள் – I
**(பாடங்கள் 1-12)**

## Assignment – I
**(Lessons 1-12)**

மொத்த மதிப்பெண்கள்: 25

Max. Marks: 25

**(விடைத்தாளின் முதல் பக்க முகப்பில் உமது பெயர், பதிவு எண், பாடப்பெயர், தேர்வு மையத்தின் பெயர் ஆகியனவற்றைக் குறிப்பிடுக)**

குறிப்பு: (i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.

(ii) வினாக்கள் 1 மற்றும் 2–களுக்கு 60-80 சொற்களிலும், 3 மற்றும் 4–களுக்கு 230-250 சொற்களிலும் விடையளிக்க.

1. எவையேனும் **இரண்டு** வினாக்களுக்கு விடையளிக்க. **(2X2.5 = 5)**

(அ) திருவள்ளுவர் கூறும் இறைவனின் இயல்புகளை விவரிக்க.

(ஆ) பாரதிதாசன் எடுத்துரைக்கும் தமிழின் பெருமைகள் யாவை?

(இ) காளையார் கோயில் கடவுள்கள் பற்றி மக்களிடையே நிலவும் கருத்து யாது?

2. எவையேனும் **இரண்டு** வினாக்களுக்கு விடையளிக்க. **(2X2.5 = 5)**

(அ) கணினியின் சிறப்பியல்புகளை விளக்கிக் கூறுக.

(ஆ) சுற்றுச்சூழலைப் பாதுகாக்க அறிவுமதி முன்வைக்கும் அறிவுரைகளை எடுத்துரைக்க.

(இ) பாரதிதாசன் உரைக்கும் தமிழின் பயன்களை விளக்கி எழுதுக.

3. 'பாரத தேசம்' என்ற பாரதியாரின் கவிதை, இந்திய தேச ஒற்றுமைக்குத் தூண்டுகோலாய் விளங்குமாற்றைப் புலப்படுத்துக.

(அல்லது) (5)

அப்துல்கலாம் அவர்களின் தொலைநோக்குப் பார்வையைத் தெளிவுபடுத்துக.

4. "குடி குடியைக் கெடுக்கும் எனினும் அதனை வென்று வாழ முடியும்" என்ற சமூகச் செய்தி 'மொட்டை மரம்' சிறுகதையில் நிறுவப்பெற்றிருக்கும் விதத்தை விவரிக்க.

(அல்லது) (5)

"தீயோரிடமும் ஏதோ ஒரு நல்ல குணம் இருக்கும்" என்ற சமூக உண்மை 'சங்குத் தேவனின் தர்மம்' சிறுகதை மூலம் வெளிப்பட்டிருக்குமாற்றை விளக்குக.

5. **ஆய்வுக் கட்டுரை வரைதல்:** (5)

உமது பகுதியில் உள்ள ஒரு வரலாற்றுச் சிறப்பு மிக்க ஊர் அல்லது கோட்டை பற்றி விளக்கமான கட்டுரை ஒன்று எழுதுக. (ஊர் அல்லது கோட்டை பற்றிய அறிமுகம், இருப்பிடம், அமைப்பு, வரலாற்றுச் சிறப்பு, இன்றைய நிலைமை முதலானவை பற்றிய விவரங்கள் உள்ளடங்கியிருத்தல் நன்று).

# தமிழ் (TAMIL)
# (237)

## பணித்தாள் – II
(பாடங்கள் 13–23)

## Assignment – II
(Lessons 13–23)

மொத்த மதிப்பெண்கள்: 25

Max. Marks: 25

**(விடைத்தாளின் முதல் பக்க முகப்பில் உமது பெயர், பதிவு எண், பாடப்பெயர், தேர்வு மையத்தின் பெயர் ஆகியவற்றைக் குறிப்பிடுக)**

குறிப்பு: (i) **அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.**

(ii) **வினாக்கள் 1** மற்றும் **2–களுக்கு 60-80** சொற்களிலும், **3** மற்றும் **4–களுக்கு 230-250 சொற்களிலும் விடையளிக்க.**

1. எவையேனும் **இரண்டு** வினாக்களுக்கு விடையளிக்க. **(2X2.5 = 5)**

 (அ) தமிழ் உயிர், மெய் மற்றும் உயிர்மெய் எழுத்துகள் எண்ணிக்கைகளைக் கூறுக.

 (ஆ) ஆண்பால் மற்றும் பெண்பால் ஒருமைக்கு எடுத்துக்காட்டுகள் தந்து விளக்குக.

 (இ) ல–ள மற்றும் ர–ற எழுத்துகளின் வேறுபாடுகளை எடுத்துக்காட்டுகள் தந்து விளக்குக.

2. எவையேனும் **இரண்டு** வினாக்களுக்கு விடையளிக்க. **(2X2.5 = 5)**

 (அ) தசரதன் தயக்கமும் விசுவாமித்திரர் கோபமும் கொண்டதற்கான காரணங்கள் யாவை?

 (ஆ) "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற கணியன் பூங்குன்றனார் கவிதையின் மையக் கருத்து யாது?

(இ) கோயில் வழிபாட்டுடன் தொடர்புடைய நிகழ்கலை ஆட்டங்கள் யாவை?

3. நிலையாமை பற்றி நாலடியார் கூறுவனவற்றைத் தொகுத்துரைக்க.

(அல்லது) (5)

கற்றற்குரிய நூல்களும் கற்கும் முறையும் பற்றித் திருக்குறள் கூறுவனவற்றை விளக்கிக் கூறுக.

4. உமது தெருவுக்கு மின்விளக்கு வசதி கேட்டு ஊராட்சித் தலைவருக்கு வேண்டுகோள் கடிதம் ஒன்று எழுதுக.

(அல்லது) (5)

பழைமைமிக்க உன் பள்ளியின் சிறப்புகள் குறித்து உன் நண்பன் ஒருவனுக்குக் கடிதம் ஒன்று எழுதுக.

5. **ஆய்வுக் கட்டுரை வரைதல்:** (5)

மத்திய அரசின் 'கட்டாயக் கல்வித் திட்டம்' குறித்து கட்டுரை ஒன்று எழுதுக. ('கட்டாயக் கல்வித் திட்டம்' முன்வைக்கும் கொள்கைக் கருத்துகள், நடைமுறைப் படுத்துதற்குரிய அவசியங்கள், சாத்தியப்பாடுகள், சமூகப் பயன்கள் முதலானவை பற்றிய விவரங்கள் உள்ளடங்கியிருத்தல் நன்று).

# தமிழ் (TAMIL)
# (237)

## பணித்தாள் – III
**(பாடங்கள் 24–35)**

## Assignment – III
**(Lessons 24–35)**

மொத்த மதிப்பெண்கள்: 25

Max. Marks: 25

(விடைத்தாளின் முதல் பக்க முகப்பில் உமது பெயர், பதிவு எண், பாடப்பெயர், தேர்வு மையத்தின் பெயர் ஆகியனவற்றைக் குறிப்பிடுக)

குறிப்பு: (i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.

(ii) வினாக்கள் 1 மற்றும் 2–களுக்கு 60-80 சொற்களிலும், 3 மற்றும் 4–களுக்கு 230-250 சொற்களிலும் விடையளிக்க.

**1.** எவையேனும் **இரண்டு** வினாக்களுக்கு விடையளிக்க. **(2X2.5 = 5)**

(அ) பேருந்து முன்பதிவு விண்ணப்பத்தை நிறைவு செய்யும் முறையைக் கூறுக.

(ஆ) வங்கியில் பணம் எடுக்கும் முறைகள் எத்தனை உள்ளன ?

(இ) தரிசு நிலம் என்றால் என்ன ?

**2.** எவையேனும் **இரண்டு** வினாக்களுக்கு விடையளிக்க. **(2X2.5 = 5)**

(அ) பாடலிபுரத்துக்கு வந்த சீன யாத்திரிகர் யார் ? அவரை வியக்க வைத்தது எது ?

(ஆ) காந்தியடிகளின் தொண்டுள்ளத்தை விளக்குக.

(இ) சரபோசி II ஆட்சி புரிந்த ஆண்டுகள் யாவை ?

3. பள்ளிகளில் காணப்படும் மனித உரிமை மீறல்களும் அவற்றைத் தடுப்பது பற்றியும் கட்டுரை ஒன்று வரைக.

(அல்லது) (5)

காந்தியாரின் தென்னாப்பிரிக்கப் பயண அனுபவங்களை விளக்குக.

4. குமணன்–இளங்குமணன் என்ற அண்ணன்–தம்பி இடையே நிலவிய பகைமை நீங்கப் பெருந்தலைச் சாத்தனார் வினையாற்றிய விதம் குறித்து கட்டுரை ஒன்று எழுதுக.

(அல்லது) (5)

சத்துணவுத் திட்டத்தில் வேலை வேண்டி மாவட்ட ஆட்சித் தலைவருக்கு விண்ணப்பம் ஒன்று எழுதுக.

5. ஆய்வுக் கட்டுரை வரைதல்: (5)

'வயது வந்தோர் கல்வி' பற்றி விளக்கமான கட்டுரை ஒன்று எழுதுக. (வயது வந்தோர் கல்வியின் அவசியம், அரசின் கொள்கைத் திட்டம், ஊக்கச் செயல்பாடு, பயன்பாடு முதலானவை பற்றிய விவரங்கள் உள்ளடங்கியிருத்தல் நன்று).